முதல் கட்ட ஆய்வு பணி நிறைவு:

# விமானநிலையம்–கிளாம்பாக்கம் இடையே மெட்ரோ ரெயில் விரிவாக்க திட்டம்!

## 6 மாதங்களில் விரிவான அறிக்கை!!

சென்னை, நவ. 12–

சென்னை விமான நிலையம் வண்டலூர் கிளாம்பாக்கம் இடையே 16 கி.மீ. தொலைவுக்கான மெட்ரோரெயில் விரிவாக்க திட்டத்துக்கான முதல்கட்ட ஆய்வு முடிவுகள் திருப்திகரமாக நிறைவடைந்துள்ளன. அடுத்தகட்டமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை மெட்ரோ ரெயில் நிறுவனம் தொடங்கியுள்ளது.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக, மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் கட்ட மெட்ரோ ரெயில்திட்டத்தில், விமான நிலையம் வண்ணாரப்பேட்டை வரையிலான முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்– பரங்கிமலை வரையிலான இரண்டாவது வழித்தடத்திலும் திட்டப்பணிகள் முடிந்து, ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரெயில்களில் தினசரி சராசரி 95 ஆயிரம் பேர் பயணம் செய்கின்றனர். இதையடுத்து, வண்ணாரப்பேட்டை விம்கோநகர்வரைமெட்ரோ ரெயில் விரிவாக்க திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில், சென்னை புறநகர் பகுதிகளில் கூட்ட நெரிசலை குறைக்கும் வகையில், விமான நிலையத்தில் இருந்து வண்டலூர் கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரெயில்சேவையைவிரிவாக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

### ஆய்வு

இதன்படி, அந்ததடத்தில் மண் ஆய்வு உள்பட பல்வேறுஆய்வுகளைமெட்ரோ ரெயில் நிறுவனம் மேற்கொண்டது. இதில், எந்தெந்த சாலைகள் வழியாக செல்வது, எவ்வளவு தூரம், வாகன நெரிசல், பயணிகள் போக்குவரத்து தேவை உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதன்பிறகு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

ஆய்வின் முடிவுகள் திருப்திகரமாக கிடைத்துள்ளன. தொடர்ந்து, அடுத்தகட்டமாக மேற்படி திட்டப்பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க மெட்ரோரெயில்நிறுவனம் முடிவு செய்துள்ளது. அதன்படி, விரிவான திட்ட அறிக்கையைதயாரிக்கும்பணியை மெட்ரோரெயில்நிறுவனம் தொடங்கியுள்ளது. இந்தப் பணிமுடிய 6 முதல் 8 மாதம் வரை ஆகும்.

இது தொடர்பாக மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

சென்னை விமான நிலையத்தில் இருந்து புதிய பேருந்து முனையம் வரவிருக்கும் கூடுவாஞ்சேரியை அடுத்தகிளாம்பாக்கம்வரை மெட்ரோ ரெயில் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. முதல்கட்ட விரிவாக்க பாதைஜி.எஸ்.டிசாலையில் 16 கி.மீ. நீளத்தில் அமையவுள்ளது. விமான நிலையத்தில் இருந்து ஜி.எஸ்.டி சாலையில் 16 கி.மீ. நீளம், ஜி.எஸ்.டி சாலையில் இருந்து தாம்பரம் மற்றும் முடிச்சூர் சாலை வரை 19 கி.மீ. நீளம் மற்றும் விமான நிலையம் கண்டோன்மென்ட் பல்லாவரம் பேருந்து நிறுத்தம், ஜி.எஸ்.டி சாலையில் இருந்து அஸ்தினாபுரம் மற்றும் தாம்பரம் மேற்கு, முடிச்சூர் சாலை வழியாக கிளாம்பாக்கம் வரை செல்லும் 20 கி.மீ. சாலைகள் என்று மூன்று வெவ்வேறு வழிகளில் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டன. இதில், முதலாவதாக ஆய்வு செய்யப்பட்ட ஜி.எஸ்.டி சாலையில் 16 கி.மீ. தொலைவு கொண்டசாலைதேர்வுசெய்யப்பட்டுள்ளது.

சாலையின்மையப்பகுதியில் உயர்த்தப்பட்ட பாதை அமைத்து மெட்ரோ ரெயில் இயக்குவது குறித்து பரிசீலனையில்உள்ளது. அத்துடன் ரெயில் நிலையங்களுக்கு தேவையான இடங்களில் பெருநகரபோக்குவரத்துகழகத்துடன் ஒருங்கிணைந்து அவற்றின்நிலங்களைபயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு ரயில் நிலையத்துக்கும் மற்றொரு ரெயில் நிலையத்துக்கும் 1.2 கி.மீ. இடைவெளியில் மொத்தம் 13 ரெயில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. தற்போது இந்த வழித்தடத்தில் 7 புறநகர் ரயில்நிலையங்கள்உள்ளன. நிலம் கையகப்படுத்தல் மற்றும் தூரம் குறைவாக இருப்பதால் ஜி.எஸ்.டி. சாலையில்மெட்ரோரெயில்பாதை அமைக்க அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான நிலம் கையகப்படுத்துவது தொடர்பான ஆலோசனையும்நடைபெற்றுவருகிறது.